3869

AL/2023(2024)/58/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) I
நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I
Drama and Theatre (Tamil) I

58 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

| பகுதி I | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

சுட்டெண் : ..........................................

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி **II** இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

※ பகுதி **II** இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

※ **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

※ இப்பகுதியில் **1** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**1.** "தான் பெறுகின்ற அனுபவத்தைப் பிறரும் அனுபவிக்க வைப்பதே கலை" எனக் கூறியவர்
(1) வில்லியம் வேட்ஸ் வேத் (2) எரிக் நியூட்டன் (3) பியேட்ஸ்லி
(4) ஹெகல் (5) அஸ்வகோஸ் (........)

**2.** வானொலி நாடகத்தின் பிரதான இயல்புகளிலொன்று
(1) ஒரே நேரத்தில் உலகெங்கும் உள்ள பல இலட்சக்கணக்கான பார்ப்போரைச் சென்றடையும்.
(2) கமராவின் சித்திரிப்புக் கலைவடிவமாகும்.
(3) மனம் ஒரு அரங்காகத் தொழிற்படும்.
(4) கமராவின் வல்லமையால் நடிகர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும்.
(5) உடனடி எதிர்வினைகளைக் காணும்படி செய்யும். (........)

**3.** "நாடகமென்பது உலக நடைமுறைகளைப் போலச் செய்தலாகும்" எனக் கூறியவர்
(1) பேனாட்சா (2) பரதமுனி (3) கொரேஸ்
(4) அரிஸ்டோட்டில் (5) அலடைஸ் நிக்கொல் (........)

**4.** கலை பற்றிய ம. இராசமாணிக்கனார் முன்வைத்த கோட்பாடு
(1) முனைப்புப் பெற்ற உணர்ச்சிகளின் தன்னிச்சையான வெளிப்பாடு என்பதாகும்.
(2) கலைஞரது வெளியிடும் வெளிப்பாடு மட்டுமன்றி அதன் வெளிப்பாட்டினையே கலைஞர் உணர்வு நிலையில் துய்க்கின்ற அனுபவம் என்பதாகும்.
(3) உண்மை நிலையினைப் புலன்களுக்கு ஏற்ற வகையில் அளிப்பது என்பதாகும்.
(4) மெய்ப்பொருளின் முற்றத்திலிருந்து துய்ப்போரைக் கருவறைக்கு இட்டுச்சென்று உலகியலைக் கடந்து நிற்கும் காட்சியைப் புலப்படுத்தி நிற்கும் ஆற்றல் என்பதாகும்.
(5) மனிதனது உள்ளத்தைத் தன்வசமாக்கி, நிரப்பி அவ்வளவோடு நில்லாமல் வெளிப்படுத்தும் ஆற்றல் என்பதாகும். (........)

[பக். 2 ஐப் பார்க்க

5. பின்வரும் கூற்றுகளுள் பலே, ஒபேறா ஆகிய வடிவங்கள் தொடர்பான **பொருந்தா** இயல்புடைய கூற்று
(1) ஆற்றுகைக் கலை வடிவங்கள்.
(2) அசைவுகள், அசைவியக்கங்கள் முக்கிய இடம்பெறும்.
(3) இசை பிரதான இடத்தை வகிக்கும்.
(4) இந்தியாவிலும் சீனாவிலும் தோற்றம் பெற்றன.
(5) உடல்வழி, குரல்வழிச் சித்திரிப்புகள் இடம்பெறும். (........)

6. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
அ - நீண்ட கதைப் பின்னலமைப்புக் காணப்படும்.
ஆ - அதிக பாத்திரங்கள் பயன்படுத்தப்படும்.
இ - அதிக வர்ணனைகள், காட்சிகள், உணர்வுகள் மிக விளக்கமாகச் சொல்லப்படும்.
ஈ - மிகக் குறைந்தளவு பாத்திரம் பயன்படுத்தப்படும்.
உ - கட்டிறுக்கமான கலைவடிவம்.
இவற்றுள் நாவல் இலக்கியம் தொடர்பான மிகப் பொருத்தமான கூற்றுகளை மாத்திரம் கொண்ட தொகுதியினைத் தெரிவுசெய்க.
(1) அ, ஆ, இ (2) அ, இ, ஈ (3) அ, இ, உ
(4) ஆ, இ, ஈ (5) இ, ஈ, உ (........)

7. 'பரடொஸ்' (Parados) என்பது கிரேக்க திறஜெடி நாடகக் கட்டமைப்பில்
(1) நாடக அறிமுகத்தைக் குறிக்கும்.
(2) ஆடுகளத்துள் பிரவேசித்தலைக் குறிக்கும்.
(3) கூட்டு பக்திப்பாடல் பாடுவதைக் குறிக்கும்.
(4) சம்பவங்கள் காட்சிகளாக நிகழ்த்தப்படுவதைக் குறிக்கும்.
(5) இசைப்பாமுகாரி எழுப்புவதைக் குறிக்கும். (........)

8. நாடகம் பற்றிய அடியார்க்கு நல்லார் கூற்று
(1) "வாழ்க்கையின் ஒரு துண்டம்" என்பதாகும்.
(2) "சுவைபட வந்தனவெலாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறல்" என்பதாகும்.
(3) "உலக இயல்பைப் போலச் செய்தல்" என்பதாகும்.
(4) "யாதாயினும் ஒரு செயலைப் போலச் செய்தல்" என்பதாகும்.
(5) "கதை தழுவி வரும் கூத்தே" என்பதாகும். (........)

9. கிரேக்க நடிகர் தெஸ்பிஸ் தொடர்பான **தவறான** கூற்று
(1) உலகின் முதலாவது நடிகர்.
(2) டித்திறாம்பில் பெரிய மாற்றங்களைச் செய்தவர்.
(3) பெண் பாத்திரங்களைப் பெண்களே ஏற்கச் செய்தவர்.
(4) கோரசிலிருந்து நடிகர்களைப் பிரித்தவர்.
(5) உலகிற்குச் சித்திரிப்பை முதன்முதலில் அறிமுகம் செய்தவர். (........)

10. மேல்வரும் கூற்றுகளுள் நாடக எழுத்துரு பற்றிய சரியான கூற்று
(1) பெரும்பாலும் நடிப்பதற்காக மாத்திரமே எழுதப்படும்.
(2) மொழி, கவிதைப் பாங்கிலேயே காணப்படும்.
(3) படிப்பதற்குரியதாகவும் இலக்கியமாகவும் இருக்கும்.
(4) வார்த்தைகளைப் பயன்படுத்தும் கலையன்று, வார்த்தைகளின் கலையாகும்.
(5) கரு, கதைப்பின்னல், பாத்திரம், மோதுகை என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும். (........)

11. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
அ - நாடக ஆற்றுகையின் அடிப்படையான செயலொழுங்கு
ஆ - எழுதப்பெற்ற எழுத்துருவை மேடையில் படைத்தல்
இ - நிதி தொடர்பான அனைத்து விடயங்களுக்கும் பொறுப்பாக இருத்தல்
ஈ - மேடைக் காட்சிகளை ஒழுங்கமைப்புச் செய்தல்
உ - நெறியாளரைத் தெரிவுசெய்தல், நடிகர்களை ஒழுங்கு செய்தல்
இவற்றுள் நாடகத் தயாரிப்புடன் தொடர்புடைய கூற்றுகளைக் கொண்ட விடையினைத் தெரிவுசெய்க.
(1) அ, ஆ, இ (2) அ, ஆ, ஈ (3) அ, இ, உ
(4) ஆ, ஈ, உ (5) இ, ஈ, உ (........)

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



12. கிரேக்க நாடகாசிரியர் யூறிப்பிடிஸ்,
   (1) தனிமனித உளவியலில் அக்கறை கொண்டிருந்தார்.
   (2) இரண்டாவது நடிகரைத் தோற்றுவித்தார்.
   (3) அகமெம்னன், சோபெறி போன்ற நாடகங்களை எழுதினார்.
   (4) புதிய மகிழ்நெறி நாடகங்களை எழுதிப் புகழ்பெற்றார்.
   (5) ஆழமான கேலி, கிண்டல் கொண்டமைந்த நாடகங்களை எழுதினார். (........)

13. மேல்வரும் கூற்றுகளுள் இயற்பண்புவாதத்துடன் தொடர்புடைய கூற்று
   (1) மனித இருப்பினைக் குறியீடாகச் சித்திரித்தல்.
   (2) தனிமனிதனுக்குப் பதிலாக சமூக மனிதனை முதன்மைப்படுத்தல்.
   (3) எடுத்துரைப்பு முறையை அறிமுகம் செய்தல்.
   (4) வாழ்வையும் மனிதரையும் உள்ளவாறு மேடைக்குக் கொண்டு வருதல்.
   (5) படச்சட்ட அரங்கின் எல்லைகளை உடைத்து வெளியே வருதல். (........)

14. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
   அ - வாழ்வை இலட்சிய நோக்காகப் பார்த்தல்
   ஆ - அலெக்ஸாண்டர், விக்டர் குகே முக்கியமானவர்கள்
   இ - நாடகக் கதை புனைவுத் தன்மை வாய்ந்ததாகக் காணப்படுதல்
   ஈ - தீயவர் தண்டனை பெறுவர், நல்லவர் நன்மை பெறுவர் என்ற அடிப்படைச் சிந்தனை கொண்டிருத்தல்
   உ - வீரத்தையும் தியாகத்தையும் உணர்வெழுச்சி நிரம்பிய நிலையில் படைத்தல்

   இக்கூற்றுகளுள் கற்பித நாடக மரபுடன் தொடர்பான கூற்றுகள் அடங்கிய தொகுதியைத் தெரிவுசெய்க.
   (1) அ, ஆ, இ (2) அ, ஆ, உ (3) அ, இ, உ
   (4) ஆ, இ, ஈ (5) இ, ஈ, உ (........)

15. சமஸ்கிருத அரங்கில் ஜேஸ்ட (அளவில் பெரியது) அரங்கிற்குரிய பார்ப்போர்
   (1) தேவதைகள் (2) மன்னர் (3) படை வீரர்
   (4) அரசவைப் புலவர் (5) பொதுமக்கள் (........)

16. இயல்பற்ற, லலித அங்க அசைவுகளைக் கொண்ட நடிப்பு முறை எனக் கருதக்கூடியது
   (1) லோக தர்மி நடிப்பு முறை (2) நாட்டிய தர்மி நடிப்பு முறை
   (3) இயற்பண்புவாத நடிப்பு முறை (4) யதார்த்த நடிப்பு முறை
   (5) உலக வழக்கு நடிப்பு முறை (........)

17. உலக அரங்கில் அபத்த அரங்கை முதன்மைப்படுத்தியவர்களுள் ஒருவர்
   (1) ரசீன் (2) பெக் (3) ஜெனே
   (4) ஸ்ரின்பேர்க் (5) விக்ரர் குகே (........)

18. 'சமயக் கரணங்கள்' நாடக அம்சங்களைக் கொண்டுள்ளன. இதிலிருந்து 'மக்கள் அரங்கு' தோன்றியிருக்க வேண்டும் எனக் கூறியவர்
   (1) கா.சிவத்தம்பி (2) எதிரிவீர சரச்சந்திர (3) ஜேன் ஹறீசன்
   (4) றிட்ஜ்வே (5) கீத் (........)

19. சமஸ்கிருத நாடக மரபில் கதைப்பின்னல் அழைக்கப்படும் முறை
   (1) அவத்தைகள் (2) அர்த்தப் பிரகிருதிகள் (3) சட்டகம்
   (4) விமர்சக சந்தி (5) நாந்தி (........)

20. "நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான நம்பிக்கை உண்டாதல்" சமஸ்கிருத நாடகக் கட்டமைப்பில்
   (1) ஆரம்ப ஆகும். (2) பிரயத்ன ஆகும்.
   (3) பிரத்தியாச ஆகும். (4) நியதாப்தி ஆகும்.
   (5) பலாகம ஆகும். (........)

21. சாகுந்தல நாடகத்தில் சகுந்தலை கண்ணுவர் ஆச்சிரமத்திலிருந்து விடைபெற்றுச் செல்லும்போது பார்ப்போரிடையே ஏற்படும் ரச உணர்வு
   (1) சிருங்கார (2) ரௌத்திர (3) பயானக
   (4) கருணா (5) பீபத்ஸ (........)

[பக். 4 ஐப் பார்க்க

**22.** 'எந்தையும் தாயும்' நாடகத்தில் வரும் ஒரே வகையான உணர்வினைக் கொண்ட பாத்திரங்கள்
(1) ஐயாத்துரை, செல்வரட்ணம் (2) ஐயாத்துரை, சங்கரப்பிள்ளை
(3) கண்ணன், மகேஸ்வரி (4) சங்கரப்பிள்ளை, செல்வரட்ணம்
(5) வசந்தி, மகேஸ்வரி (........)

**23.** சமஸ்கிருத நாடக மரபில் நடிகரிடத்தே தானே தோற்றம் பெறும் உணர்வு நிலை எனப்படும் 'அஸ்ர' பாவம் குறிக்கும் செயற்பாடு
(1) மூர்ச்சையுறல் (2) ஸ்தம்பித்தல் (3) கண்ணீர் விடுதல்
(4) நிறம் மாறுதல் (5) குரல் மாறுதல் (........)

**24.** சங்ககாலச் சடங்கரங்கின் ஆடல், பாடலின்போது முறையே பொருநர், பாணர், கோடியர் போன்றோர் வைத்திருந்த வாத்தியங்கள்
(1) கோடு, வயிர், யாழ் (2) கிணை, யாழ், முழவு (3) யாழ், முரசம், கோடு
(4) சல்லரி, முரசு, தாளம் (5) முரசம், சவணிக்கை, யாழ் (........)

**25.** சி. மௌனகுரு அவர்கள் குறிப்பிடும் 'சடங்கு நாடகம்' தொடர்பான நான்கு பிரிவுகளுக்குள்ளும் **உள்ளடங்காதது**
(1) மதகுருவே தெய்வமாக அபிநயித்து ஆடுகின்ற சமயச்சடங்கு
(2) ஐதிகக் கதைகளை உள்ளடக்கிய சமயச்சடங்கு
(3) நாடகக் கதைகளை உள்ளடக்கிய சமயச்சடங்கு
(4) மதகுரு இயக்க இன்னொருவர் தெய்வமாக அபிநயித்து ஆடுகின்ற சமயச்சடங்கு
(5) நாடக நிகழ்ச்சிகள் தனியாகப் பிரியத் தொடங்கிய சமயச்சடங்கு (........)

**26.** தமிழ் நாடக மரபில் பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் என்பன
(1) கதை சொல்லும் அரங்கெனப்பட்டன. (2) வரலாறு கூறும் அரங்கெனப்பட்டன.
(3) சொல்லாட்சி அரங்கெனப்பட்டன. (4) பாடல் அரங்கெனப்பட்டன.
(5) கூத்தரங்கெனப்பட்டன. (........)

**27.** உணர்ச்சிகள் உடலில் வெளிப்படுவதை 'மெய்ப்பாடு' எனக் குறிப்பிட்ட நூல்
(1) பரிபாடல் (2) கலித்தொகை (3) நாடகவியல்
(4) தொல்காப்பியம் (5) கவிதையியல் (........)

**28.** மூன்று பக்கப் பார்ப்போரைக் கொண்ட அரங்கவெளி
(1) வட்டக்களரி (2) கரலிய (3) படச்சட்ட மேடை
(4) கூத்தம்பலம் (5) சமஸ்கிருத விக்கிரஸ்ட அரங்கு (........)

**29.** தமிழக அரங்கில் புறம் சார்ந்த சடங்கு
(1) களவேள்வி (2) வெறியாட்டு (3) தைநீராடல்
(4) வாடாவள்ளி (5) வேலன் வெறியாடல் (........)

**30.** பின்வருவனவற்றுள் யாழ்ப்பாணத் தென்மோடிக் கூத்துக்களின் பண்பு எனக் கூறப்பட **முடியாதது**
(1) கத்தோலிக்கக் கூத்துக்களே தென்மோடி என அழைக்கப்பட்டன.
(2) படச்சட்ட மேடைகளில் ஆடப்படுகின்றன.
(3) பாத்திரங்கள் உச்சஸ்தாயியில் பாடி நடிக்கும்.
(4) புலசந்தோர் எனப்படும் கதை சொல்லும் பாத்திரம் பயன்படுத்தப்படும்.
(5) கத்தோலிக்கப் புனிதர்களின் கதைகள் பேசப்படும். (........)

**31.** பின்வரும் கூற்றுகளுள் கோவலன் கூத்துடன் தொடர்புடைய சரியான கூற்று
(1) மாசி மாதம் அமாவாசை கழித்து வரும் மூன்றாம் நாள் நிகழ்த்தப்படும்.
(2) தட்டான் ஆட்டம் பிரத்தியேகமானது.
(3) பாத்திரங்களின் வரவைப் பாத்திரங்களே பாடிவரும்.
(4) மாதவி, மாதரி போன்ற பாத்திரங்கள் முதன்மை பெறும்.
(5) தாளக் கட்டுக்களின்றிப் பாடல்கள் தெம்மாங்கில் அமையும். (........)

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



32. "நாடகச்சூழல், உணர்வு என்பனவற்றினைக் கருத்திற்கொண்டே இசை நாடகங்களுக்கான இராகங்கள் வரையறுக்கப்படுகின்றன." அந்தவகையில் 'நீலாம்பரி' இராகம்
    (1) கோப உணர்வை வெளிப்படுத்தும்.
    (2) சோக உணர்வை வெளிப்படுத்தும்.
    (3) தாலாட்டினைக் குறிக்கும்.
    (4) சிரிப்பை வெளிப்படுத்தும்.
    (5) வியப்பை வெளிப்படுத்தும். (........)

33. பின்வருவனவற்றுள் 'கோலம' நாடகத்தின் பிரதான பண்பெனப்படுவது.
    (1) இலங்கையில் மலைநாட்டுப் பிரதேசத்தில் ஆடப்படுவது ஆகும்.
    (2) 'கின்னரய' எனும் பாய் இழைக்கும் சமூகத்தினரால் நிகழ்த்தப்படுவது ஆகும்.
    (3) சுகப்பிரசவம் மற்றும் குழந்தை வரம் வேண்டி நிகழ்த்தப்படுவது ஆகும்.
    (4) நாடக நிகழ்த்துகை 'தானயம்பெல' எனும் அரங்க வெளியில் நிகழ்த்தப்படுவது ஆகும்.
    (5) செழிப்பு, சௌபாக்கியம் என்பவற்றை எதிர்பார்த்துச் செய்யப்படுவது ஆகும். (........)

34. பின்வருவனவற்றுள் பேட்டோல் பிறெ.்டின் நாடக முறை பற்றிய **பொருந்தாக்** கூற்று
    (1) தூரப்படுத்தல் அல்லது அந்நியமாதல் என்ற எண்ணக்கரு முன்வைக்கப்பட்டது.
    (2) உளவியல் முறைசார்ந்த உள்வாரியான நடிப்பு வெளிப்படுத்தப்பட்டது.
    (3) மூன்று பென்னி காசுகள், கலிலியோ போன்ற நாடகங்கள் இம்முறையில் தயாரிக்கப்பட்டன.
    (4) காவிய பாணி நடிப்பு என இனங்காணப்பட்டது.
    (5) ஸ்ரனிஸ்லவ்ஸ்கியின் முறைமை நடிப்பிற்கு எதிரானது. (........)

35. சீன ஒபேறா நிகழ்த்துகையின்போது பயன்படும் வகைமாதிரிப் பாத்திரங்களில் ஒன்று **அல்லாதது**
    (1) செங் (ஆண்) (2) கொகட்டா (குழந்தை) (3) டான் (பெண்)
    (4) சௌ (கோமாளி) (5) ஜிங் (வீரன்) (........)

36. பின்வருவனவற்றுள் ஜப்பானிய கொவாக்கா (Kowaka) பற்றிய சரியான கூற்று
    (1) சாமுறாய் போர் வீரர்களுடைய கதைகளைக் கூறுவது.
    (2) பிரபுத்துவ சடங்காசார வாழ்வின் காட்சிகளைச் சித்திரிப்பது.
    (3) ஜப்பானிய பாரம்பரிய விகட நாடகம்.
    (4) ஜப்பானிய மிகைப்பாட்டுப் பண்புடைய நாடகம்.
    (5) ஜப்பானிய பாவை அரங்கைக் குறிப்பது. (........)

37. சீன ஒபேறாவில் புலமையாளர்கள் அணியும் ஆடைகளைக் குறிக்கும் வர்ணம்
    (1) சிவப்பு (2) பச்சை (3) ஊதா
    (4) மஞ்சள் (5) நீலம் (........)

38. ஜப்பானிய நாடக மரபில் குறியீட்டுப் பாங்கு, ஊமம், நடனம் என்பவற்றைக் கொண்டமைந்த நடிப்பு மோடி
    (1) அறகொட்டோ (Aragoto) (2) மை (mie)
    (3) மிக்யுக்கி (michiyuki) (4) ஷைட் (shite)
    (5) வக்கி (waki) (........)

39. சிங்கள 'நாடகம' வில் பாத்திரங்களை அறிமுகப்படுத்துபவர்
    (1) விகடகவி (2) கோணங்கி (3) கோடங்கி
    (4) கட்டியக்காரன் (5) பொத்தே குரு (........)

40. மத்தியகால நாடகங்களினுள் பருவச் சுழற்சி நாடகங்கள் என அழைக்கப்பட்டவை
    (1) பொதுவணக்கமுறை நாடகங்கள் (2) மறைபொருள் நாடகங்கள்
    (3) அற்புத நாடகங்கள் (4) புனிதரின் நாடகங்கள்
    (5) ஒழுக்கப்பண்பு நாடகங்கள் (........)

* *

[பக். 6 ஐப் பார்க்க

3869

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) I
நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I
Drama and Theatre (Tamil) I

58 T I

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ உபபகுதி **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் உபபகுதி **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### உபபகுதி A

1. (i) "சடங்கும் அரங்கும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன" இக்கூற்றினை விளக்குக. (05 புள்ளிகள்)
   (ii) குளுர்த்திச் சடங்கு, பாஸ்கா சடங்கு என்பனவற்றின் ஆற்றுகை முறைமைகளை எடுத்துரைக்குக. (05 புள்ளிகள்)
   (iii) மேற்குறித்த சடங்குகள் ஆற்றப்படும் சமூகத்தின் சமூக, பண்பாட்டு அம்சங்கள் அச்சடங்குகளில் செல்வாக்குச் செலுத்தியிருக்கும் முறைமையை விளக்குக. (05 புள்ளிகள்)

2. "நடிப்பானது நாடகத்தின் அடிப்படை மூலகங்களுள் ஒன்று" என்பர்.
   (i) 'நடிப்பு' என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது? (05 புள்ளிகள்)
   (ii) நடிப்புத் தொடர்பாக பின்வரும் எண்ணக்கருக்கள் அரங்கில் ஏற்படுத்திய மாற்றங்களை முன்வைக்குக.
   (அ) சிந்தனையைத் தூண்டும் அந்நியமாதல் நடிப்பு முறை (05 புள்ளிகள்)
   (ஆ) பார்ப்போரைப் பங்குகொள்ளச் செய்யும் வகையில் 'நடிகர் தூண்டியாகச் செயற்படும்' நடிப்பு முறைமை (05 புள்ளிகள்)

3. பின்வரும் அரங்குகள் அவ்வக் காலங்களில் ஏற்படுத்திய சிந்தனைகளையும் மாற்றங்களையும் முன்வைக்குக.
   (i) இயற்பண்புவாத அரங்கு
   (ii) அபத்த அரங்கு
   (iii) சூழலியல் அரங்கு
   (3 × 05 = 15 புள்ளிகள்)

### உபபகுதி B

4. நீர் பார்த்த / பங்குபற்றிய நவீன நாடகம் ஒன்றில் ஆற்றுவோரதும் பார்வையாளரதும் செயற்பாடுகள் பற்றி எடுத்துக்கூறி விளக்குக. (15 புள்ளிகள்)

5. சமகாலப் பிரச்சினை ஒன்றினை வெளிப்படுத்தக்கூடிய ஆற்றுகை முறைமை ஒன்றைக் குறிப்பிட்டு, அதில் நாடக எழுத்துருவின் (script) முக்கியத்துவம் பற்றி விளக்குக. (15 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.
   (i) கதாசிஸ்
   (ii) ஒபேறா நடிப்பு முறை
   (iii) நாடகத்திற்கான இசை
   (iv) மறுதலைப் பாகமாடுதல்
   (v) பார்வையாளர் பதிற்குறிகள்
   (3 × 05 = 15 புள்ளிகள்)

※ ※ ※

இங்கே வேறாக்கவும்

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) II
நாடகமும் அரங்கியலும் (தமிழ்) II
Drama and Theatre (Tamil) II

**58 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

| பகுதி I மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

சுட்டெண் : ..............................

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி **II** இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

※ பகுதி **II** இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

※ **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

※ இப்பகுதியில் **1** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**1.** இயற்பண்புவாத நாடக முன்னோடி எனக் கருதப்படும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்
(1) அன்ரன் செக்கோவ் (2) எமிலி சோலா (3) ஸ்ரனிஸ்லாவ்ஸ்கி
(4) கோணேல் (5) ரசீன் (........)

**2.** அடியார்க்கு நல்லார் கூறிய 'கதை தழுவி வரும் கூத்து' என்பதற்கு "கூத்துக்குரிய ஆட்ட முறைமை மூலம் ஒரு கதையைச் சித்திரிப்பது" என விளக்கமளித்தவர்
(1) மீனாட்சி சுந்தரனார் (2) இராமானுஜம் (3) கா. சிவத்தம்பி
(4) மறைமலை அடிகள் (5) சூரியநாராயண சாஸ்திரி (........)

**3.** கிரேக்க அரங்க திறஜெடி நாடகக் கட்டமைப்பில் ஸ்ரசிமன் (Stasiman) எனப்படுவது
(1) நாடகத்தை அறிமுகம் செய்தல்
(2) கோரஸ் முதன் முதலில் ஆடுகளத்துள் பிரவேசித்தல்
(3) சம்பவங்கள் காட்சிகளாக நிகழ்த்தப்படுதல்
(4) கோரஸ் இசைப்பாக்களை நின்று பாடுதல்
(5) நாடகத்தின் செய்திகள் கூறப்படுதல் (........)

**4.** சமஸ்கிருத நாடகக் கட்டமைப்பினை ஆதரித்து நாடகத்தை வளர்த்துச் செல்வதில் ஐந்து சந்திகள் காணப்படும். அவற்றுள் நாடகத்தின் நோக்கத்தால் உண்டாகும் நெருக்கடியைக் குறிப்பிடும் சந்தி
(1) முகசந்தி (2) விமர்சகசந்தி (3) பிரதிமுகசந்தி
(4) நிர்ஹனசந்தி (5) கர்ப்பசந்தி (........)

**5.** ரோம அரங்கிற்கு, ஐரோப்பிய அரங்க வரலாற்றில் மிக முக்கிய தாக்கம் விளைவித்தவர்களில் ஒருவராகக் கருதப்படும் கிரேக்க நாடகாசிரியர்
(1) அரிஸ்ரோபேன்ஸ் (2) யூறிப்பிடிஸ் (3) தெஸ்பிஸ்
(4) ஈஸ்கிலஸ் (5) மெனாண்டர் (........)

[பக். 2 ஐப் பார்க்க

6. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

அ - 16 ஆம் நூற்றாண்டில் இத்தாலியில் தோற்றம் பெற்றது.
ஆ - காவியத்தன்மையான மொழி பயன்படுத்தப்பட்டது.
இ - பாடலை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.
ஈ - உடல் மொழி பயன்படுத்தப்பட்டது.
உ - நடனங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.

இக்கூற்றுகளுள் பலே ஆற்றுகையுடன் தொடர்புடைய கூற்றுகளைக் கொண்ட தொகுதியினைத் தெரிவுசெய்க.

(1) அ, ஆ, இ (2) அ, இ, ஈ (3) அ, இ, உ
(4) ஆ, இ, ஈ (5) இ, ஈ, உ (........)

7. பின்வருவனவற்றுள் தொலைக்காட்சி பற்றிய **பொருந்தாக்** கூற்று

(1) களஞ்சியப்படுத்தத்தக்கதாகும்.
(2) ஒரே நேரத்தில் பலரைச் சென்றடைவதாகும்.
(3) பார்ப்போரின் உடனடித் தாக்கத்திற்குட்பட்டதாகும்.
(4) கமராவின் வல்லமையால் காட்சிகளை உருவாக்குவதாகும்.
(5) கதைக்களங்களுக்கேற்ப காட்சியை சித்திரிப்பதாகும். (........)

8. கிரேக்க நாடகாசிரியர் ஈஸ்கிலஸ் அவர்களால் எழுதப்பெற்ற முக்கூட்டு நாடகத்தொகுதியாக உள்ளவை

(1) அன்ரிகனி, ஈடிப்பஸ், அற்கொலோனஸ்
(2) ஒரெஸ்ரியா, த சோபோறி, த கியூ மெனிட்ஸ்
(3) த பேர்சியன்ஸ், புரொமீடியஸ் பெண்ட், தீபஸிற்கு எதிராக எழுவர்
(4) அகமெம்னன், த சோபோறி, த கியூ மெனிட்ஸ்
(5) மக்பத், ஹம்லட், ஹெலன் (........)

9. பின்வரும் நாடகங்களுள் சூத்திரகரால் எழுதப்பட்டது

(1) மாலதி மாதவம் (2) ஸ்வப்ன வாசவதத்தை (3) மிருச்சகடிகம்
(4) நாகானந்தம் (5) இரத்தினாவளி (........)

10. பின்வருவனவற்றுள் 'எந்தையும் தாயும்' நாடகம் பற்றிய **பொருந்தாக்** கூற்று

(1) 1990 களில் எழுதப்பெற்றது.
(2) நாற்சார் அரங்கில் நிகழ்த்தப்பட்டது.
(3) நடிப்பு யதார்த்தமாகவும் சொல்லாடல்கள் யதார்த்த விரோதமாகவும் அமைக்கப்பட்டிருந்தது.
(4) அன்று நிலவிய யாழ்ப்பாண மக்களின் உண்மை நிலையை எடுத்துக் காட்டியது.
(5) மூன்று குடும்பங்களினூடாக அக்கால வாழ்க்கை நிலைமை வெளிப்படுத்தப்பட்டது. (........)

11. பாடினி, விறலி போன்ற பெண்பாற் கலைஞர்கள் தமிழக நாடக மரபில்,

(1) சங்க இலக்கியங்களில் கூறப்படுவோர்.
(2) சிலப்பதிகாரத்தில் கூறப்படுவோர்.
(3) பல்லவ காலத்திற் கூறப்படுவோர்.
(4) பாண்டிய மன்னர் காலத்தில் கூறப்படுவோர்.
(5) சோழர் காலத்தில் கூறப்படுவோர். (........)

12. கிரேக்க அவலச்சுவை நாடக முறை தொடர்பாக அரிஸ்ரோட்டில் கூறும் மூன்றன் ஒருமைக்குள் உள்ளடங்குவன

(1) செயல், இடம், காலம்
(2) காலம், களம், இடம்
(3) செயல், இயக்கம், காலம்
(4) கரு, கதை, மோதுகை
(5) கதை, கதைப்பின்னல், விடயம் (........)

13. ஆற்றுகை செய்யும் வெளியினைத் 'திருக்குறள்' எனும் இலக்கியம் குறிக்கும் பெயர்

(1) பண்ணை (2) ஆடுகளம் (3) நாடகசாலை
(4) களரி (5) நானாவித நாடகசாலை (........)

14. முல்லைத்தீவுக்குரிய கோவலன் கூத்தினைப் பதிப்பித்து நூலுருவாக்கம் செய்தவர்

(1) இ. பாலசுந்தரம் (2) அருணா செல்லத்துரை (3) மெற்றாஸ் மெயில்
(4) இரகுநாதன் (5) காரை செ. சுந்தரம்பிள்ளை (........)

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**15.** சத்தியவான் சாவித்திரி இசை நாடகத்தில் "ஏனோ எனை எழுப்பலானாய்..." எனும் பாடல் குறிக்கும் உணர்வு அல்லது செயல்

(1) கடவுளை வேண்டுதல் (2) மகிழ்தல் (3) கேள்வி - பதில்
(4) தர்க்கித்தல் (5) காட்சி விசாரணை (........)

**16.** சோபோகிளிசின் 'ஈடிப்பஸ்' நாடகத்தைத் தமிழில் மொழியாக்கம் செய்த இலங்கை நாடகாசிரியர்

(1) இரத்தினம் (2) சோமசுந்தரம்
(3) ம. சண்முகலிங்கம் (4) இ. முருகையன்
(5) சுரேஸ் கனகராஜா (........)

**17.** "அருந்தவம் செய்தேனடா அவதிக்குள் ஆளேனடா...." எனும் இசைநாடகப் பாடல் இடம்பெறும் நாடகம்

(1) பக்தநந்தனார் (2) ஞானசௌந்தரி (3) நல்லதங்காள்
(4) பூதத்தம்பி (5) அரிச்சந்திரா (........)

**18.** பின்வரும் பாத்திரங்களுள் ஈடிப்பஸ் நாடகத்தில் வரும் தோன்றாப் பாத்திரமாகக் கருதக்கூடியது

(1) லேயஸ் (2) தெய்ரீசியஸ் (3) கிரயோன்
(4) ஜொகஸ்டா (5) காவலாளி (........)

**19.** 'கோடை' நாடகத்தை முதன்முதலில் நெறியாள்கை செய்தவர்

(1) பிரான்சிஸ் ஜெனம் (2) எஸ். ரி. அரசு (3) க. பாலேந்திரா
(4) தாசீசியஸ் (5) நா. சுந்தரலிங்கம் (........)

**20.** பின்வருவனவற்றுள் ஈடிப்பஸ் நாடகத்தின் பிரதான மோதுகை

(1) அரசுக்கும் அதிமானுடனுக்கும் இடையிலான போராட்டம்
(2) தனிமனிதனுக்கும் இறைநியதிக்கும் இடையிலான போராட்டம்
(3) விதிக்கும் சாபத்திற்கும் இடையிலான போராட்டம்
(4) இயற்கைக்கும் செயற்கைக்கும் இடையிலான போராட்டம்
(5) உண்மைக்கும் போலிக்கும் இடையிலான போராட்டம் (........)

**21.** இராவணேசன் நாடகத்தில் வரும் பின்வரும் பாடல்களில் இராவணனின் வீரம் வெளிப்படும் பாடல்

(1) "மும்மூர்த்திகளை ஓட்டி இம்மானிலத்திலே..."
(2) "அனுப்பினேன் வீரர் எல்லாம் அனைவரும் இறந்தனரையோ..."
(3) "எதிர்த்திடுவேன் என்றுரைக்கும் எனது மைந்தா..."
(4) "துன்றிடும் பெண்ணை விட்டு தொழுதுவாழ்..."
(5) "யுத்தம் வந்தால் பகைமைகள் பரவும்..." (........)

**22.** எலிசபெத் கால இங்கிலாந்தில், 'த ஸ்பனிஸ் திறஜெடி' (The Spanish Tragedy) என்ற நாடகத்தை எழுதிப் புகழ் பெற்றவர்

(1) ஜோன் லிலி (2) சேர் பிலிப் சிட்னி (3) பென்ஜோண்சன்
(4) தோமஸ் கீற் (5) கிறிஸ்தோபர் மாலோவ் (........)

**23.** 'ஒரு பாவையின் வீடு' நாடகத்தில் நாடக ஆரம்பத்தில் தோன்றும் பாத்திரங்கள்

(1) நோறாவும் ஹெல்மரும் (2) ஹெல்மரும் வைத்தியரும்
(3) லிண்டேயும் குறாக்ஸ்ரட்டும் (4) பொதிதூக்கியும் நோறாவும்
(5) நோறாவும் ஹெலனும் (........)

**24.** 'கிங்லியர்' நாடகத்தில் நேர்மையான, தந்தைமேல் விருப்புக்கொண்ட பாத்திரமாக சேக்ஸ்பியரால் சித்திரிக்கப்படும் பாத்திரம்

(1) எட்மண்ட் (2) எட்கார் (3) கோணேறில்
(4) றீகன் (5) ஆஸ்வால்டு (........)

**25.** வில்லியம் சேக்ஸ்பியரின் மகிழ்நெறி நாடகங்களுள் ஒன்று பின்வருவனவற்றுள் எது?

(1) ஒத்தெல்லோ
(2) றோமியோவும் யூலியட்டும்
(3) 2 ம் றிச்சேர்ட்
(4) வெனிஸ் நகர வியாபாரி
(5) அன்ரோனியோவும் கிளியப்பெற்றாவும் (........)

26. அபிஞ்ஞான சாகுந்தலம் நாடகத்தில் வரும் சாரங்கரவன் மற்றும் சாரத்துவதன் பாத்திரங்கள் என்போர்
(1) தேவேந்திரன் அனுப்பிய தூதுவர் (2) தேர்ப்பாகர்
(3) கண்ணுவருடைய மாணாக்கர் (4) மீன் பிடிக்கும் செம்படவர்
(5) மாரீசன் ஏவலாட்கள் (........)

27. கிரேக்க அவலச்சுவை மற்றும் மகிழ்நெறி நாடகக் கட்டமைப்புக்களில் பொதுவாகக் காணப்படும் ஒரு பகுதி
(1) பரடொஸ் (Parados) (2) பரபாசிஸ் (Parabasis)
(3) இசைப்பா முகாரி (Lyrical lament) (4) ஸ்ரசிமா (Stasima)
(5) அகொன் (Agon) (........)

28. 'இத்தாலிய ரோம் நகரப் பேரரசின்' கதை தொடர்பாக சேக்ஸ்பியரால் எழுதப்பட்ட நாடகம்
(1) மக்பெத் (2) ஹம்லெட்
(3) ஒத்தெல்லோ (4) ரூலசும் கிரெகிவடாவும்
(5) ஜூலிய சீசர் (........)

29. எலிசபெத் காலத்தில் முன்துருத்திய அரங்காகவும் எண்கோண வடிவில் கட்டப்பட்டதுமான அரங்கு
(1) த தியேட்டர் (The Theatre)
(2) சுவான் அரங்கு (The swan theatre)
(3) த கோப் அரங்கு (The hope theatre)
(4) த றோஸ் அரங்கு (The rose theatre)
(5) த குளோப் அரங்கு (The globe theatre) (........)

30. விவாதக்கள அரங்கினை உலகிற்கு அறிமுகம் செய்தவர்
(1) தொம்சன் (2) ஒகஸ்தா போல்
(3) குறொட்டவஸ்கி (4) பீற்றர் புறூக்
(5) அன்ரனி ஆர்த்தோ (........)

31. மேல்வருவனவற்றுள் இப்சனால் எழுதப்பட்ட நாடகங்கள்
(1) பேய்கள், செரிப்பழத் தோட்டம்
(2) வெண்கட்டி வட்டம், தூரத்துப்பால்
(3) சமூகத்தின் தூண்கள், தலைவர்
(4) தலைமைக் கட்டடக்காரன், மக்களின் எதிரிகள்
(5) ஒரு பாவையின் வீடு, கண்ணாடி வார்ப்புகள் (........)

32. குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களால் **எழுதப்படாத** சிறுவர் நாடகங்களிலொன்று
(1) கண்மணிக் குட்டியார் (2) பஞ்சவர்ண நரியார்
(3) பந்தையக் குதிரையார் (4) கண்டறியாத கதை
(5) சட்டியும் குட்டியும் (........)

33. பின்வரும் கூற்றுக்களுள் 'நடிகர் ஒன்றியம்' தொடர்பான சரியான கூற்று
(1) 1978 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
(2) திரு. ஏ. ஜே. கனகரட்ணா தலைமை வகித்தார்.
(3) மொழிபெயர்ப்பு நாடகங்களை மட்டும் மேடையிட்டன.
(4) 'அரங்கம்' எனும் சஞ்சிகையினை வெளியிட்டது.
(5) 1970 களில் கொழும்பை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. (........)

34. 'தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகம்' என்பதை இலண்டனில் நிறுவி இன்றும் செயலாற்றி வருபவர்
(1) அ. தாசீசியஸ் (2) க. பாலேந்திரா (3) அ. ரவி
(4) இ. பாலசுந்தரம் (5) நித்தியானந்தன் (........)

35. தமிழக நாடக மரபில் பாடல் அரங்கை முதன்மைப்படுத்தியவர்
(1) பம்மல் சம்பந்த முதலியார் (2) ராஜமாணிக்கம்
(3) சங்கரதாஸ் சுவாமிகள் (4) எம். ஆர். ராதா
(5) மனோகர் (........)



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**36.** 'ஒரு பாவையின் வீடு' நாடகத்தில் வரும் பின்வரும் உரையாடலைக் கருதுக.

A - நிச்சயமாக அப்படித்தான்.
B - உங்கள் தகப்பனார் சுகவீனமாக இருந்தார் என நம்புகிறேன்.
A - அவர் இறந்து கொண்டிருந்தார்.
B - விரைவில் அவர் இறந்து போனார்?

இங்கு A, B எனும் பாத்திரங்கள் முறையே,

(1) நீல்ஸ் குறொக்ஸ்டட், நோறா
(2) நோறா, ஹெல்மர்
(3) லிண்டே கிறிஸ்ரினா, நோறா
(4) நோறா, நீல்ஸ் குறொக்ஸ்டட்
(5) நோறா, ராங்க்

(........)

**37.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

அ - நோய் தீர்த்தலுடன் தொடர்புடையது
ஆ - வைகாசி மாதத்தில் நடைபெறுவது
இ - அம்மன் ஆலயத்தில் இடம்பெறுவது

மேற்குறித்த கூற்றுகளுடன் தொடர்புடைய சடங்கு

(1) வேட்டைத் திருவிழா
(2) யம சங்காரம்
(3) குளுர்த்திச் சடங்கு
(4) சன்னியக்கும் சடங்கு
(5) காமன் சடங்கு

(........)

**38.** பின்வருவனவற்றுள் நாடகாசிரியர் தேவன் அவர்களால் எழுதப்பட்ட நாடகம்

(1) குரங்குகள்
(2) இரட்டை வேசம்
(3) தென்னவன் பிரம்மராஜன்
(4) ஏகலைவன்
(5) வேதாளம் சொன்ன கதை

(........)


**39.** படத்தில் காட்டப்பட்டுள்ளவரால் தழுவி எழுதப்பட்ட நாடகம்



(1) எல்லாளன்
(2) மாணிக்கமலை
(3) பொருளோ பொருள்
(4) உடையார் மிடுக்கு
(5) விதானையார் வீட்டில்

(........)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ள அரங்கிற்குரிய நாடு



(1) இலங்கை
(2) இந்தியா
(3) ஜப்பான்
(4) சீனா
(5) கிரேக்கம்

(........)

* *

[பக். 6 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) II
நாடகமும் அரங்கியலும் (தமிழ்) II
Drama and Theatre (Tamil) II

58 T II

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

✳ உபபகுதி **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் உபபகுதி **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### உபபகுதி A

**1.** "மகாகவி உருத்திரமூர்த்தியின் பா நாடகங்களுள் கோடை நாடகம் முக்கியமான ஒன்று" என்பர்.
(i) கோடை நாடகத்தின் ஊடாக வெளித்தெரியும் அதன் கரு, கதைப்பின்னல் என்பவற்றை விளக்குக. (05 புள்ளிகள்)
(ii) இந்நாடகத்தின் வாசிப்பினூடாகக் காணப்படும் சமூகப் பெறுமானங்களை இன்றைய காலத்தோடு ஒப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)
(iii) இந்நாடகத்தின் வளர்ச்சிப் போக்கில் மோதுகை மேற்கிளம்பும் **இரண்டு** சந்தர்ப்பங்களை உதாரணங்களுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

**2.** (i) "கிரேக்கத்தின் பொது நம்பிக்கையான விதி, சாபம் என்பவற்றின் அடிப்படையில் வகுத்தமைக்கப்பட்ட ஒரு தொன்மக் கதையே ஈடிப்பஸ் நாடகம் ஆகும்." இக்கூற்றினை விளக்குக. (05 புள்ளிகள்)
(ii) இந்நாடகத்தில் வரும் மோதுகைச் செயல் நிலைகள் **இரண்டைக்** குறிப்பிட்டு, அதற்கான காரணங்களையும் விளக்குக. (05 புள்ளிகள்)
(iii) இந்நாடக எழுத்துருவின் மூலக்கூறுகளான பாத்திரங்கள், சொல்லாடல், பாத்திரச் செயல்கள், காண்பியங்கள், மோதுகை தொடர்பாக கருத்துகளை முன்வைக்குக. (05 புள்ளிகள்)

**3.** (i) "வில்லியம் சேக்ஸ்பியரின் அவலச்சுவை நாடகங்களினுள் சிறந்த நாடகம் எனப் போற்றப்படுவது கிங்லியர் நாடகம் ஆகும்." இக்கூற்றினை விளக்குக. (05 புள்ளிகள்)
(ii) கிங்லியர் நாடகத்தில் வரும் எட்கர் மற்றும் கோடில்லியா பாத்திரங்களின் இயல்புகளை விளக்குக. (05 புள்ளிகள்)
(iii) குளொசெஸ்டர் பாத்திரமும் லியர் பாத்திரமும் அவர்களது சுயங்களை இழந்த பின்னர் சித்திரிக்கப்பட்டுள்ள முறைமையை எழுத்துருவில் இருந்து எடுத்துக்காட்டு உதாரணங்கள் மூலம் விளக்குக. (05 புள்ளிகள்)

### உபபகுதி B

**4.** "அரசியல், சமூகச் சூழமைவுகள் நாடகங்களின் பாடுபொருளைத் தீர்மானிக்கின்றன என்பர்." 1964 இலிருந்து இன்று வரையான இராவணேசன் நாடகத் தயாரிப்புக்களுடாக இக்கூற்றினை விளக்குக. (15 புள்ளிகள்)

**5.** 1990 களின் பிற்பாடு ஈழத்துத் தமிழ் நவீன அரங்க செல்நெறியில் சர்வதேச அரங்குகளின் ஊடாட்டத்தை எடுத்து விளக்குக. (15 புள்ளிகள்)

[பக். 7 ஐப் பார்க்க

இங்கே வேறாக்கவும்

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**6.** பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) கூத்துப் புத்தாக்கமும் வித்தியானந்தனும்

(ii) பம்மல் சம்பந்த முதலியார் நாடகங்கள்

(iii) நாடக அரங்கக் கல்லூரி

(iv) காமன் பொட்டல்

(v) நவவேட்கைவாத அரங்கு (3 × 05 = 15 புள்ளிகள்)


❊ ❊ ❊

LOL Book Store

වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න

# 25% OFF ALL BOOKS

**Including Exercise Books, CR Books, and B5 Books**




**ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්**

## ORDER BOOKS FROM LOL BOOKS STORE

0372060110 **WWW.LOL.LK**

071 777 4440 (WhatsApp)

**Cash On Delivery Available**


ORDER GCE A/L
SHORT NOTES, MODEL,
REVISION BOOKS & PAST
PAPERS IN SINHALA, ENGLISH
& TAMIL MEDIUM
LOL
BOOK
STORE
CASH ON DELIVERY
AND KOKO PAYMENT
AVAILABLE
WHATSAPP – 0717774440
WEBSITE: WWW.LOL.LK
GET READY FOR YOUR A/Ls
WITH LOL BOOK STORE!